

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.4.2025) மதுரையில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24–வது மாநாட்டின் “கூட்டாட்சிக் கோட்பாடே இந்தியாவின் வலிமை” சிறப்பு கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்வில், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், கர்நாடக மாநில உயர்கல்வித் துறை அமைச்சர் சுதாகர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், ஒருங்கிணைப்பாளருமான பிரகாஷ் காரத், தமிழ்நாடு அமைச்சர்கள் பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் சண்முகம், முன்னாள் செயலாளரும், மத்திய குழு உறுப்பினருமான கே.பாலகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கணேசன், மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் இராஜேந்திரன் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரையில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24வது மாநாட்டின் “கூட்டாட்சிக் கோட்பாடே இந்தியாவின் வலிமை” சிறப்பு கருத்தரங்கில் நேற்று முன்தினம் (3,4.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றப் பேரவையில், மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களை சிறப்பிக்கும் வகையில் சென்னை மாநகரில் உருவச்சிலை அமைக்கப்படும் என்று அறிவித்ததற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், ஒருங்கிணைப்பாளருமான பிரகாஷ் காரத் அவர்கள் மாமேதை காரல் மார்க்ஸ் – எங்கெல்ஸ் உருவம் பொறிக்கப்பட்ட நினைவு பரிசினை முதலமைச்சர் அவர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், கர்நாடக மாநில உயர்கல்வித் துறை அமைச்சர் சுதாகர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், ஒருங்கிணைப்பாளருமான பிரகாஷ் காரத், தமிழ்நாடு அமைச்சர்கள் பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் சண்முகம், முன்னாள் செயலாளரும், மத்திய குழு உறுப்பினருமான கே.பாலகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கணேசன், மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் இராஜேந்திரன் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அரசியல் சட்டத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...! முதல் பக்கத் தொடர்ச்சி

உடனே நிகழ, மாற்றம் என்பது ‘Magic’ அல்ல;அது ஒரு ‘Process’! இந்தப் பயணத்தில், 2019-ஆம் ஆண்டு முதல் நாம் இணை பிரியாமல் இருக்கிறோம். ஏன் என்றால், நம்முடைய இலக்கு என்ன - நாம் யாரை எதிர்க்க வேண்டும் - எதற்காக எதிர்க்க வேண்டும் என்ற தீர்க்கமான முடிவோடு இயங்கிக் கொண்டு இருக்கிறோம்.

தமிழ்நாட்டில் உள்ள இந்தக் கூட்டணியில் விரிசல் ஏற்படாதா? என்று நப்பாசையோடு சில வெளிநபர்கள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் எண்ணம் நிச்சயம் ஈடேறாது! இங்கு இருக்கும் யாரும், அதற்கு இடம் தரவும் மாட்டோம்! இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மைதானத்துக்கு - மழையின் காரணமாக இந்த அரங்கத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தோழர் சீத்தாராம் யெச்சூரியின் பெயரைச் சூட்டியிருப்பதைப் பார்த்தபோது, என் நெஞ்சம் கனத்தது. இந்தியாவின் தலைசிறந்த போராளிகளில் ஒருவர் நாமெல்லாம் பெருமதிப்பு வைத்திருந்த தோழர் யெச்சூரி அவர்கள்! அவரின் இழப்பு, நமக்கு மட்டுமல்ல; இந்தியாவுக்கே மிகப்பெரிய இழப்பு.

### யெச்சூரியின் சிந்தனைகள் நம்மை வழிநடத்தும்!

தோழர் சீத்தாராம் யெச்சூரி அவர்கள், பொதுவுடைமை கொள்கைகளுக்காகப் போராடியவர்! எதேச்சாதிகாரத்தைக் கடுமையாக எதிர்த்தவர்! சமத்துவச் சிந்தனையோடு சமூகநீதிச் சிந்தனையை இணைத்தவர்! மதவாதக் கருத்துகளையும் மூடநம்பிக்கை களையும் கடுமையாக எதிர்த்தவர்!அவர் மறைந்தாலும், அவரது சிந்தனைகள் என்றைக்கும் நம்மை வழிநடத்தும் என்பதற்கு அடையாளமாகத்தான் இந்த மாநாட்டு எழுச்சியை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

“கூட்டாட்சிக் கோட்பாடே இந்தியாவின் வலிமை” என்று இன்றைக்கு நாட்டுக்குத் தேவையான நாடு முழுவதும் பேசப்பட வேண்டிய கருத்தை இந்தக் கருத்தரங்குக்குத் தலைப்பாக வைத்திருக்கிறார்கள்.

கூட்டாட்சி என்ற சொல்லே இன்றைக்கு ஒன்றிய ஆட்சியாளர்களுக்கு ‘அலர்ஜி’ ஆகிவிட்டது. மாநில உரிமைகளுக்காகப் பேசுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசின் எதேச்சாதிகாரத் தன்மையால் அதிகமாக பாதிப்படைகின்றவர்களில் முதன்மையாக இருப்பது, நானும் நம்முடைய ‘சகாவு’ பினராயி விஜயனும் தான்! அதனால், இந்தக் கருத்தரங்கில் நாங்கள் பேசுவதை நீங்கள் வாக்குமூலமாகவே எடுத்துக்கொள்ளலாம்! அதைத் தான் முன்பே பேசிவிட்டுச் சென்றிருக்கிறார். அதைத் தொடர்ந்து நானும் பேச வந்திருக்கிறேன். ‘பிரதர்’ என்றார், உண்மைதான். எனக்கு அவர் மூத்த சகோதரர்.

### ஒன்றிய அரசு என்பது சட்டத்தில் இருப்பதுதான்!

நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் வரியே, “பல்வேறு மாநிலங்களால் ஆன ஒன்றியம்தான் இந்தியா” என்று தெளிவாக குறிப்பிட்டிருக்கிறது. அதனால்தான், ‘ஒன்றிய அரசு’ என்று சொல்கிறேன். சட்டத்தில் இல்லாததை நான் சொல்லவில்லை. ஆனால், அதையே அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் விரும்பவில்லை என்பதன் வெளிப்பாடுதான் அவர்களின் கோபம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், “மாநில சுயாட்சி” என்பது எங்களுடைய உயிர்க் கொள்கை! பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞரும் வலியுறுத்திய கொள்கை அது! பேரறிஞர் அண்ணாவின் உயில் என்று சொல்லப்படுகின்ற இறுதி கடிதத்திலேயே, கூட்டாட்சித் தத்துவத்தை மக்களுக்குக் கற்றுத்தர வேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறார்.

1970--இல் “மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி” என்று தலைவர் கலைஞர் அவர்கள் முப்பெரும் விழாவில் ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக உருவாக்கிக் கொடுத்தார். அதுமட்டுமல்ல, “தமிழ்ச் சமுதாயத்தைக் காக்க, இந்தியாவிலுள்ள தேசிய இனங்களைக் காக்க, இந்தியாவிலுள்ள மாநிலங்களின் உரிமைகளைக் காக்க, இந்தியாவிலே இருக்கும் மாநிலங்கள் சுயமரியாதையோடு வாழ அந்தத் தீர்மானம் ஒரு முன்னோடி.

### கூட்டாட்சிக்காக தொடர்ந்து போராடுகிறோம்!

அதுமட்டுமல்ல, உறவுக்குக்கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்” என்று 1974-இல் சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். மாநில சுயாட்சிக்காக இந்திய அளவில் கூட்டாட்சிக்காக நாம் தொடர்ந்து போராடி வருகிறோம். ஆனால், இதற்கு எதிரான பாசிச அரசாக, ஒன்றிய பா.ஜ.க. அரசு இருக்கிறது.

“மாநில அரசுகள் டெல்லிக்கு காவடி தூக்கும் நிலைமையை மாற்றி, அதிகாரப் பகிர்வுக்கு வழிகாட்டுவதுதான் தன்னுடைய அணுகுமுறையாக இருக்கும்” என்று சொல்லி பிரதமரான நரேந்திர மோடி அவர்களின் ஆட்சிதான், மாநிலங்களை அழிக்கும் ஆட்சியாக, மாநில மொழிகளைச் சிதைக்கும் ஆட்சியாக, பல்வேறு தேசிய இன மக்களை ஒழிக்கும் ஆட்சியாகப் பல்வேறு பண்பாடுகள் கொண்ட மக்களின் நம்பிக்கைகளைச் சிதைக்கும் ஆட்சியாக இருக்கிறது.

அரசியல் சட்டத்தால் உருவாக்கப்பட்ட அமைப்புகளை டம்மியாக மாற்றி, ஒற்றையாட்சித் தன்மை கொண்ட பாசிச ஆட்சியை இன்றைய பா.ஜ.க. ஆட்சி நடத்திக்கொண்டு இருக்கிறது! ஒரே நாடு -ஒரே மதம் -ஒரே மொழி - ஒரே உணவு - ஒரே தேர்தல் - ஒரே தேர்வு - ஒரே பண்பாடு என்ற ஒற்றைத் தன்மை, ஒரு கட்சியின் ஆட்சியாக முதலில் அமைந்து, ஒரே ஒரு தனி மனிதரின் கையில் அதிகாரத்தை குவிக்கத்தான் அது பயன்படும்.

### பா.ஜ.க.வின் பாசிச கோர முகத்தை வீழ்த்துவோம்!

பிறகு, அந்த தனி மனிதர் வைத்தது தான் சட்டம்! அவர் சொல்வதுதான் வேதம்! அவரால் அங்கீகரிக்கப்பட்ட சிலருக்கு மட்டும்தான் அதிகாரம்! அவரால் ஆசீர்வதிக்கப்பட்டர்களுத்தான் நிதி மூலதனம் என்று ஆகிவிடும்! பல்வேறு பரிமாணங்களில் வரும் பாசிசத்தை நாம் வீழ்த்தியாக வேண்டும்! பா.ஜ.க.வின் பாசிச கோரமுகத்தைத் தொடர் பரப்புரையின் மூலமாகத்தான் வீழ்த்த முடியும். எல்லாவற்றிற்கும் மேல் மக்கள் நலன் தான் முக்கியம் என்ற புள்ளியில் நாம் ஒன்றாக இருக்க வேண்டும்.

### பிரதமர் அன்று சொன்னதை நடைமுறைப்படுத்துவாரா?

ஏன் என்றால், ஒன்றியத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் மட்டும்தான், இந்தியாவில் கூட்டாட்சி காப்பாற்றப்படும்! பிரகாஷ் காரத் போன்றவர்கள் அதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்; தொடர்ந்து பாடுபட வேண்டும். உங்களோடு சேர்ந்து, நாங்களும் பாடுபடக் காத்திருக்கிறோம்; தயாராக இருக்கிறோம். ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமான உறவுகளை வலிமைப்படுத்த, சர்க்காரியா கமிஷனும், பூஞ்சி கமிஷனும் அளித்த பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும் என்று, 2012--இல் குஜராத் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி அவர்கள் கேட்டார்.

நான் இந்த மேடையில் நின்று பிரதமர் மோடி அவர்களை ஒரு கேள்வி கேட்கிறேன். தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பிரதமர் ஆகியிருக்கும் நீங்கள், அதை நடைமுறைப்படுத்த எடுத்த நடவடிக்கை என்ன? சொல்ல வேண்டும். இன்னும் 2 நாட்களில் தமிழ்நாட்டிற்கு வரப் போகிறீர்கள். நேற்று சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டு, அவர் வருகிற நேரத்தில் அதற்கு விளக்கம் சொல்ல வேண்டும் என்று கேட்டிருக்கிறோம்.

பல்வேறு சட்டங்களின் மூலமாக மாநில உரிமைகளைப் பறிக்கிறீர்கள். ஜி.எஸ்.டி. மூலமாக மாநில நிதி உரிமையை எடுத்துக்கொண்டீர்கள். எதிர்க்கட்சி ஆளும் மாநில சட்டமன்றங்களில் நிறைவேற்றும் சட்டங்களுக்கு அனுமதி தருவது இல்லை.

ஒன்றிய அரசு சார்பில் சிறப்புத் திட்டம் கொடுப்பதில்லை. எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில், ஆளுநர்களை பா.ஜ.க. மாநிலத் தலைவர்களாக மாற்றி, முழுநேர அரசியல்வாதியாக செயல்பட வைத்து, மாநிலங்களின் வளர்ச்சியைத் தடுக்கிறீர்கள். பா.ஜ.க.வுக்கு எதிரான மாநில அரசுகளை மிரட்டுகிறீர்கள். ஆட்சிகள் கவிழ்க்கப்படுகின்றன; கட்சிகள் உடைக்கப்படுகின்றன; கட்சிகள் மாற கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், மாநிலங்களே இருக்க கூடாது என்று நினைக்கிறீர்கள்.

அதே மாதிரிதான், வக்ப் திருத்தச் சட்டம். தமிழ்நாடு சட்டமன்றத்தில், நேற்று அதற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றிவிட்டுதான் இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன். நாடாளுமன்ற கூட்டுக் குழுவில் எங்களுடைய எதிர்ப்பைப் பதிவு செய்தோம். ஆனால், எதையும் கேட்காமல், இஸ்லாமியர்களை பாதிக்கும் இந்த சட்ட மசோதாவை நள்ளிரவு 2 மணிக்கு நிறைவேற்றியிருக்கிறார்கள்.

நம்முடைய அரசமைப்புச் சட்டத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் இது. இந்தச் சட்டத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவித்துவிட்டுதான் இங்கு வந்திருக்கிறேன்.

அரசமைப்புச் சட்டத்தின் அங்கமான கூட்டாட்சித் தத்துவத்தைத் தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் சிதைக்க நினைக்கிறது பா.ஜ.க. அரசு. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் இதைக் கடுமையாக எதிர்க்கிறோம். இதற்கு எதிராக, ஒரு கூட்டு நடவடிக்கைக் குழுவை உருவாக்கி, நான்கு முதல்வர்கள் உள்ளிட்ட பல்வேறு பிரதான கட்சிகளின் பிரதிநிதிகள் சந்தித்து, ஆலோசனை நடத்தினோம்.

ஏற்கனவே உள்ள நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறையை மேலும் 25 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று தீர்மானத்தை நிறை வேற்றினோம். ஆனால், இன்று வரை அதற்குப் பிரதமர் மோடி அவர்கள் பதில் சொல்லவில்லை. இப்படி அரசியல் சட்ட உரிமைகளைப் பறிக்கும் ஆட்சியை பா.ஜ.க. நடத்திக் கொண்டிருக்கிறது. இதுதான் பாசிசம்.

### பா.ஜ.க. ஆட்சியின் முடிவில் தான் இந்தியக் கூட்டாட்சி மலரும்!

மாநில சுயாட்சி--கூட்டாட்சி--சமூக நீதி - மதநல்லிணக்கம் ஆகியவற்றுக்கு எதிரான - சுருக்கமாக சொல்லவேண்டும் என்றால், மக்களுக்கு எதிரான பா.ஜ.க. ஆட்சியின் முடிவில்தான், இந்தியாவில் கூட்டாட்சி மலரும்! அதை உருவாக்க, இந்தியா முழுவதும் இருக்கும் ஜனநாயகச் சக்திகளைத் திரட்டுவோம். இதற்காகத்தான் தி.மு.க. குரல் கொடுக்கிறது. பொதுவுடமைத் தோழர்களும் இதற்காக குரல் கொடுக்க வேண்டும். இணைந்து போராடுவோம்! பாசிசத்தை வீழ்த்துவோம்! வீழ்த்துவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# மாமேதை காரல்மார்க்ஸுக்கு சிலை! முதல் பக்கத் தொடர்ச்சி

### காரல் மார்க்ஸின் அறிக்கையை தமிழில் வெளியிட்ட பெரியார்!

இந்தியாவைப் பற்றி யாரும் எழுதாத காலத்தில், மிகச்சரியாக இந்தியாவைப் பற்றி எழுதியவர் அவர்தான். “தீர்க்க முடியாத முரண்பாடுகள் உள்ள பல்வேறு இனங்கள், குலமரபுகள், சாதிகள், சமயக் கோட்பாடுகள், அரசுகள் ஆகியவைகளை ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்டிருக்கிற புவியியல் ஒற்றுமையைத்தான் இந்தியா என்று அழைக்கிறோம். இந்தியாவின் கடந்த காலத்தில் அரசியல் எவ்வாறு மாறிய போதிலும் சமுதாய நிலை மாறவில்லை. எது எப்படி இருந்தாலும் சரி, அந்த மகத்தான, கவர்ச்சிகரமான தேசம் ஒரு காலத்தில் மறுமலர்ச்சி அடைவார்கள் என்று உறுதியாக எதிர்பார்க்கலாம்” என்று எழுதியவர் காரல் மார்க்ஸ் அவர்கள்.

### சென்னை மாநகரில் மாமேதையின் சிலை!

அதனால்தான் மார்க்ஸ்எங்கெல்ஸ் எழுதிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை முதன்முதலாகத் தமிழில் மொழிபெயர்த்து 1931ஆம் ஆண்டே வெளியிட்டார் தந்தை பெரியார் அவர்கள். அத்தகைய மாமேதை மார்க்ஸ் அவர்களது உருவச் சிலை தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரில் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமையடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நூறு ஆண்டுகளுக்கு முன்பே தொழிற்சங்க இயக்கம் கோலோச்சிய இந்த சென்னை மாநகரில் அந்த மாமேதையின் சிலை அமைவது பொருத்தமானது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, இரண்டாவது அறிவிப்பு;

அகில இந்திய பார்வர்டு பிளாக் தலைவரும் உறங்காப்புலி என்று போற்றப்பட்டவருமான திரு. பி.கே. மூக்கையாதேவர் அவர்களுக்கு நாளை 103ஆவது பிறந்தநாள்!

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் 1923ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் நாள் அவருடைய பிறந்த நாள். இளம் வயதில் பசும்பொன் முத்துராம லிங்கத் தேவரின் நம்பிக்கையைப் பெற்று பார்வர்டு பிளாக் கட்சியில் இணைந்தார்.

### மக்கள் நாயகனாக வலம் வந்தவர் மூக்கையா தேவர்!

சுதந்திர இந்தியாவின் முதல் தேர்தலில் 1952ஆம் ஆண்டு பெரியகுளம் தொகுதியில் போட்டியிட்டு வென்றார். அதன்பிறகு 1957, 1962, 1967, 1971, 1977 ஆகிய தேர்தல்களில் தொடர்ந்து உசிலம்பட்டி தொகுதியில் வெற்றிவாகை சூடியவர் மூக்கையா தேவர் அவர்கள். 1971ஆம் ஆண்டு இராமநாதபுரம் நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு வென்றவர். ஒரே தொகுதியில் தொடர்ச்சியாக வென்று மக்கள் நாயகனாக வளர்ந்தவர் அவர்.

### மூக்கையா தேவரின் கோரிக்கையை ஏற்ற அண்ணா!

1967ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் நடைபெற்றபோது பேரறிஞர் பெருந்தகை அண்ணாவுக்கு தோள் கொடுத்தவர் பி.கே.மூக்கையா தேவர் அவர்கள். அப்போது இந்தப் பேரவையில் தற்காலிகப் பேரவைத் தலைவராக இருந்த அவர்தான் அன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கச்சத்தீவு ஒப்பந்தத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் முழங்கியவரும் அவர்தான். தேவர் சமுதாய மக்களுக்காக கல்வி நிறுவனங்கள் உருவாக்க வேண்டும் என்று முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் கோரிக்கை வைத்தவரும் அவர். அதனால்தான் கமுதி, உசிலம்பட்டி, மேலநீலிதநல்லூர் ஆகிய இடங்களில் அரசு கல்லூரிகள் கழக ஆட்சியில் அப்போது அமைக்கப்பட்டன.

‘நியாயத்துக்கு ஒரு மூக்கையா’ என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றப்பட்ட பி.கே.மூக்கையாதேவர் அவர்களை சிறப்பிக்கும் வகையில், உசிலம்பட்டியில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவிப்பதிலும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பினை வெளியிட்டார்.

---

### ஒன்றிய பா.ஜ.க. அரசே திரும்பப்பெறு! திரும்பப் பெறு!!

# வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவை திரும்பப் பெறு!

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முழக்கம்!

சென்னை, ஏப். 5 -

**ஒன்றிய பா.ஜ.க. அரசே வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவை திரும்பப் பெறு என்று பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முழக்கமிட்டார். அதனைத் தொடர்ந்து உறுப்பினர்கள் முழக்கமிட்டனர்.**

அதனையடுத்து பேரவையில் முதல்வர் அவர்கள்,

சிறுபான்மை இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் 1995 ஆம் ஆண்டின் வக்ஃபு சட்டத்தினை திருத்துவதற்கு மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள வக்ஃபு திருத்த சட்டமுன்வடிவை திரும்பப் பெற வேண்டுமென்று ஒன்றிய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்தி 27.3.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஒன்றிய அரசுக்கு அன்றே அனுப்பப்பட்ட நிலையில், இன்றைக்கு வக்ஃபு திருத்த சட்டமுன்வடிவு மக்களவையில் பெரும் எதிர்ப்புகளுக்கிடையே நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கருத்தில்கொள்ளாமல். இந்தியா முழுவதிலும் இச்சட்டமுன்வடிவிற்கு எதிராக முன்வைக்கப்பட்ட கருத்துகளையும் கருதாமல், ஒன்றிய அரசு கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக தன்னுடைய கணைகளைத் தொடுத்து வருவதை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டோர், அரசியலமைப்புச் சட்டத்தை நன்கு அறிந்தோர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இந்த அவை எள்முனை அளவும் ஏற்றுக்கொள்ளாது. எனவே, வக்ஃபு திருத்தச் சட்டமுன்வடிவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வலியுறுத்தி நான் கூறும் வரிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பக் கூறுவதற்கு தங்களுடைய அனுமதியை கோருகிறேன்.

பேரவைத் தலைவர்: அனுமதிக்கப்படுகிறது.

**மு.க. ஸ்டாலின் அவர்கள்,**

**திரும்பப் பெறு, திரும்பப் பெறு!**<br>
**திரும்பப் பெறு, திரும்பப் பெறு!**<br>
**வக்ஃபு திருத்தச் சட்டமுன்வடிவை**<br>
**வக்ஃபு திருத்தச் சட்டமுன்வடிவை**<br>
**திரும்பப் பெறு, திரும்பப் பெறு!**<br>
**திரும்பப் பெறு, திரும்பப் பெறு!**<br>
**வக்ஃபு திருத்தச் சட்டமுன்வடிவை**<br>
**திரும்பப் பெறு, திரும்பப் பெறு!**

என்று வாசகங்களை சொல்லச் சொல்ல உறுப்பினர்கள் திரும்பச் சொன்னார்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி)

### கறுப்பு பேட்ஜ் அணிந்து வந்த முதல்வர் - அமைச்சர்கள் - உறுப்பினர்கள்!

மேலும் வக்ஃபு திருத்த சட்ட மசோதா நேற்று மக்களவையில் அதிகாலை 2 மணி அளவில் நிறைவேற்றப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கறுப்பு பேட்ஜ் அணிந்து சட்டப் பேரவையில் பங்கேற்றார்.

இதேபோன்று அவை முன்னவர் துரைமுருகன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தோழமைக்கட்சி உறுப்பினர்களும் கறுப்பு பேட்ஜ் அணிந்து மக்களவையில் வக்ஃபு திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதற்கு தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.